**Judicial Form No.53**

**(See Rule 42)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 201 of 2024

DATE : 17 .02.2026

Depositions of witness for Prosecution

PW: 8

| | | | |
|---|---|---|---|
| Name | செல்லப்பாண்டியன் | Caste | |
| Father/Husband's Name | பால்சாமி | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2026

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி விசாரணை செய்யப்படும் பொழுது வழக்கின் எதிரி எவ்வித அறிவிப்புமின்றி நீதிமன்றத்தில் இருந்து சென்றுவிட்ட காரணத்தினால், அவருக்கு எதிராக பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, காலதாமதத்தை தவிர்க்க சாட்சி நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை** –

நான் தற்போது திருவில்லிபுத்தூர் தாலுக்கா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 18.08.2018 அன்று 15.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு ராஜா என்பவர் பதிவு செய்து வைத்திருந்த மேற்படி காவல் நிலைய குற்ற எண் 268/2018 என்ற வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினம் 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோபால்சாமி, ராமராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ராஜாராம், ஜீவ மணி, சின்னராஜ், ராமராஜ், கோபால்சாமி ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் 19 மணிக்கு இவ்வழக்கின் எதிரி முனியாண்டி என்பவரை வத்திராயிருப்பு காசி விஸ்வநாதர் கோவிலுக்கு பின்பு வைத்து கைது செய்து, 19.15 மணிக்கு நிலையம் கொண்டுவந்து, உரிய பதிவுகளுக்கு பின் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அதன் பின்னர் 07.09.2018 அன்று சார் பதிவாளர் திரு பாஸ்கரன் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குனர் திருமதி முத்துலட்சுமி ஆகியவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். அன்றைய தினம் இந்த வழக்கு பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கில் சட்ட பிரிவுகளை 448, 429, 294(b) மற்றும் 506(2) IPC லிருந்து 447, 435, 294(b) மற்றும் 506(2) IPC ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து பெற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி விசாரணை செய்யப்படும் பொழுது வழக்கின் எதிரி எவ்வித அறிவிப்புமின்றி நீதிமன்றத்தில் இருந்து சென்றுவிட்ட காரணத்தினால், அவருக்கு எதிராக பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, காலதாமதத்தை தவிர்க்க சாட்சி நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டார். எதிரி தரப்பில் யாரும் ஆஜராகாத காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்து வைக்கப்படுகிறது

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு